# தந்தி

இல: 1093 | 1970 ஜூலை 28 செவ்வாய்க்கிழமை | விலை சதம் 5


University of Jaffna Sri Lanka Periodicals Division Library

### விவசாயிகள், பொதுமக்கள் பயனடைவர்

# மரக்கறிக்கும் நிர்ணயவிலை!

**மரக்கறி வகைகளுக்கும் நிர்ணய விலை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இத்திட்டத்தின்படி விவசாயிகளிடமிருந்து விற்பனைத் திணைக்களம் மரக்கறி வகைகளை விலை கொடுத்து வாங்கும். இதற்காக நாடு பூராவும் பல கொள்வனவு நிலையங்கள் திறக்கப்படும். இவ்வாறு வாங்கப்பட்ட மரக்கறி வகைகள் குறிப்பிட்ட ஒரு விலைக்கு பொது மக்களுக்கு விற்கப் படும்.

தற்சமயம் மரக்கறி வியாபாரிகளால் விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படும் பல இன்னல்கள் இத்திட்டத்தால் முற்றாக ஒழியுமென அரசாங்கம் நம்புகிறது.

அரசாங்கத்தின் இப்புதிய திட்டத்தால் விவசாயிகளும் பொது மக்களும் சிறந்த பயன் அடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.


விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மரக்கறி வகைகள் நாடு பூராவும் விற்பனைத் திணைக்கள கடைகள் மூலமாகவும், "நடமாடும் கடைகள்" மூலமாகவும் நிர்ணய விலைக்கு பொது மக்களுக்கு விற்கப்படும்.

விற்பனைத் திணைக்கள கடைகள் மூலமாக மற்றைய உப உணவுப் பொருட்களும் பொது மக்களுக்கு இவ்வாறு நிர்ணய விலையில் விற்கப்படும். (ல)

### சாரிகளுக்கு ரூ. 50 லட்சம்

"வொயில்", "பட்டர் நைலோன்" இன சாரிகளை இங்கு உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஜவுளிகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு முன்னர் அரசாங்கத்தால் 50 லட்சம் ரூபா அனுமதிக்கப்பட்டதாம்.

பொதுத் தேர்தல் நெருங்கும் காலத்தில் கைத்தொழில் அமைச்சினல் 40 பேருக்கு இத்தொகை பெற்றுக் கொடுக்கப் பட்டிருப்பதாக கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. (ல)



தென் வியட்நாம் புரட்சி (வியட்காங்) அரசாங்கத்தின் வெளிநாட்டு மந்திரி திருமதி நூயன் தி பின் டிட்டு நாயகா விமான நிலையத்தில் கூடிய மக்களுக்கு கையை அசைத்து மகிழ்ச்சி தெரிவிக்கிறார். (ய)

### அரசாங்க மாடி வீடுகள் முற்பணமின்றி வாடகைக்கு

முற்பணம் பெறுமல் தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழுள்ள மாடி வீடுகளை வாடகைக்கு விடுவது பற்றி ஆராயப்படுகிறது.

தற்சமயம் இவ் வீடுகள் முற்பணம் பெறப்பட்டு மாத வாடகைக்கு விடப்படுவது தெரிந்ததே.

வீடுகளை உடைமையாக்கும் திட்டத்தின் கீழ் நடுத்தர வகுப்பினர் இந்த மாடி வீடுகளைப் பெற முடியாதிருப்பதாக புகார்கள் செய்யப்பட்டதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வாடகை செலுத்தி வீடுகளை உடைமையாக்கும் திட்டத்தின்கீழ் குடியிருப்பாளர்கள் ஆரம்பத்தில் 5,000 ரூபாவை முற்பணமாகச் செலுத்தி அதன் பின்னர் மாத வாடகை செலுத்த வேண்டும்.

இந்த முற்பணத்தைச் செலுத்த வசதியில்லாததால் மாடி வீடுகளுக்கு விண்ணப்பித்த ஆயிரக் கணக்கானேர் அவற்றைப் பெற முடியாமல் இருக்கின்றனர். (ர)

### மீனாட்சி



என்னுங்க, இந்தத் தோசைக் கடைத் தோசையளுக்கு உளுந்து போடுகிறுங்களா?

ஆமாங்க, இந்தப் பாழ்பட்ட எதையும் கவனியாத முனிசிப்பல் லைசென்ஸ் இருக்கும் வரைக்கும் அவங்க ஏன் உளுந்து போடுவான்!

### காமன்வெல்த் அமைப்பிலிருந்து இலங்கை விலகாது

"குடியரசானலும் இலங்கை காமன்வெல்த் நாட்டு அமைப்பில் இருந்து விலகாது. காமன்வெல்த் நாட்டு அமைப்பினுள்ளேயே இலங்கை தனி ஒரு சுதந்திர நாடாக இருக்கும்".

இவ்வாறு அரசமைப்பு நிர்ணய சபை கருதுவதாகத் தெரிய வந்து உள்ளது.

இலங்கையும், பாகிஸ்தானும் இப்போது இதே முறையைப் பின்பற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. (ல)

### மாணவ ஆசிரியர்கள் நியமனம் இனி இல்லை

மாணவ ஆசிரியர் நியமனங்களை நிறுத்துவது என்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இனிமேல் ஆசிரிய பதவிகளுக்குச் சேர்க்கப்படுபவர்களுக்கு அவர்களுடைய கல்வித் தகைமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப் பட வேண்டுமென அமைச்சு முடிவு செய்துள்ளது.

குறைந்த சம்பளத்துக்கு ஆசிரிய பதவிகள் வழங்கப்படுவதால் ஆசிரிய பதவியின் தகுதி குறைந்து விடுவதாக கல்வி மந்திரி கருதுவதாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாணவ ஆசிரியர்களை நியமிப்பதை நிறுத்துவதால், வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சிக்கு எவ்விதமான தடையும் ஏற்படாது என கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறினர்.

ஒன்றாக வேலை செய்யும் ஆசிரியர்கள் இரண்டு விதமான சம்பளத் திட்டங்களின் கீழ் வேலை பார்ப்பது அநீதியாகும் என அண்மையில் பல ஆசிரிய சங்கங்கள் கல்வி அமைச்சருக்கு எடுத்துக் காட்டியதை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (ல)

### இறைச்சிக் கடைக்காரர் மீண்டும் போராட்டம்!

கொழும்பு புறக்கோட்டை இறைச்சிக் கடைக்காரர் மீண்டும் மாநகர சபையுடன் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

காலியாகும் இறைச்சிக் கடைகளை வியாபாரிகளுக்கு ஒப்படைக்கும் விஷயத்தில் பல மோசடிகள் நடைபெறுவதாக இறைச்சிக் கடைக்காரர்கள் . பலர் கூறுகின்றனர்.

இது பற்றி உள்ளூராட்சி மந்திரிக்கும் இவர்கள் முறையிட்டுள்ளனர்.

லைசென்சுகள் ரத்துச் செய்யப்பட்ட வியாபாரிகளுக்கும் மற்றும் பல காரணங்களுக்காக கடை உரிமை ரத்துச் செய்யப்பட்ட வியாபாரிகளுக்கும் மாநகர சபை மீண்டும் கடைகளைக் கொடுக்க ஆரம்பித்துள்ளதாம்.

### பேச்சு வார்த்தை

இலங்கை – இந்திய வர்த்தகத்தை மேலும் ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடன் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடத்தப்படும்.

இதற்கான திகதியையும், இடத்தையும் நிர்ணயிக்கும் பொறுப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனைவியிடமிருந்து மறைந்து வாழ்ந்தவர்

# ஜீவனும்சம் கட்டாமல் இந்தியாவுக்கு ஓடினர்!

மன்னார், ஜூலை 27

ஜீவனும்சம் கட்டாமல் தன் சொந்த மனைவியிடமிருந்து மறைந்து வாழ்ந்த ஒருவர் கடைசியாக இந்தியாவுக்குத் தப்பி ஓடி விட்டதாக 6 பிள்ளைகளின் தாயார் பொலீஸாரிடம் முறையிட்டிருக்கிறாள்.

கடந்த 10 மாதங்களாக அவர் தனக்கும் பிள்ளைகளுக்கும் ஜீவனும்சம் கட்டத் தவறி விட்டதாய் ராசம்மா என்ற அந்த அபாக்கியவதி தெரிவித்தாள்.

சில காலமாகத் தானும் தன் கணவனும் பிரிந்து வாழ்ந்த தாயும், இதைத் தொடர்ந்து தனக்கும், ஆறு பிள்ளைகளுக்கும் ஜீவனும்சம் கோரி தாம் வழக்குத் தாக்கல் செய்திருந்ததாயும் ராசம்மா கூறினள்.

ஆறு குழந்தைகளுக்கும் மாதம் ரூபா 55 ஜீவனும்சம் கட்டும்படி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஆனல் கடந்த 10 மாதங்களாக அவர் இத்தொகையைச் செலுத்தவில்லை.

இதனல் ஏமாற்றமும் கோபமும் அடைந்த ராசம்மா ஜீவனும்சம் தராமல் ஏமாற்றியதற்காக மீண்டும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் பொருட்டு கணவனைத் தேடி வந்தாள்.

ஆனல் அவர் இந்தியாவுக்குத் தப்பி ஓடிவிட்ட செய்தியை இறுதியில்தான் அறிந்தாள். (ய)

## ஒரே நாளில் இரு சபைகள்

அரசமைப்பு நிர்ணய சபைக் கூட்டமும் நாடாளுமன்றக் கூட்டமும் இனி ஒரே நாளில் நடைபெற உள்ளன. இரு கூட்டங்களும் இரு வேளைகளில் தனித்தனியாக நடைபெறும்.

இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுவதற்கு முன்னேடியாகச் சகல கட்சித் தலைவர்களின் விருப்பமும் அறியப்படும். (ய)

## மாமனர் அவர் மனைவியை கவர்ந்து சென்ருராம்

"நான் வீட்டில் இல்லாத சமயம் எனது மாமனர், ஒன்றை விட்ட சகோதரர், மைத்துனர் உட்பட ஏராளமானேர் என் மனைவியைப் பார்க்க வருவதுண்டு. அவர்களிடமிருந்து என் மனைவியைப் பாதுகாப்பதே கஷ்டமாகி விட்டது. இறுதியாக என்னை அடித்துவிட்டு, என் மாமனர் தன் மகளை அழைத்துச் சென்று விட்டார். எனவே அவளுக்கு ஜீவனும்சம் கட்ட முடியாது."

ஜீவனும்சம் வழக்கு ஒன்றில் எதிர் மனுதார் கொழும்பு மாஜிஸ்திரேட் திரு. ஏ. எப். டி சில்வாவிடம் இவ்வாறு கூறினர்.

இவ்வழக்கில் சுவந்தி கங்கான மலகே சுதுஹாமினே என்ற பெண், பாலாவி சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் தனது கணவன் முனசிங்க ஆராச்சிகே முனிதாஸ என்பவரிடமிருந்து ஜீவனும்சம் கோரி இருக்கிருள்.

தன் கணவர் வேண்டுமென்றே தன்னைப் புறக்கணித்ததாக தனது மனுவில் அவள் கூறியிருக்கிருள்.

எதிர் மனுதார் ஜீவனும்சம் கட்டத் தவறியதால் வழக்கு விசாரணை மீண்டும் நடைபெற்றது.

மனுதார் தமது புகாரில் கூறி இருப்பதாவது:-

"விவாகத்துக்குப் பின் நாங்கள் இருவரும் எங்கள் பெற்ருேருடன் சில காலம் வசித்தோம். பின் புத்தளத்தில் உள்ள ஒரு வீட்டுக்கு வசிக்கச் சென்ருேம். எனது உறவினர்கள் அங்கு என்னைப் பார்க்க வருவதை விரும்பாமல் என் கணவர் என்னை வதைக்கத் தொடங்கினர். இவ்வாறு என்னை வதைத்துப் பயமுறுத்தியது காரணமாக, அவர் வீட்டில் இல்லாத போது என்னைப் பார்க்க அவர்கள் வருவதுண்டு. இம்சிக்கப்பட்டபோதிலும்கூட அவர் இல்லாத போது வீட்டுக்கு யார் யார் வந்தார்கள் என்பதை என் கணவனிடம் நான் சொல்லத் தவறியதில்லை.

"அவர் மூலம் எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. சில மாதங்களில் அது இறந்தும் விட்டது. இறுதியாக ஒரு நாள் என் கணவர் என்னை தாயார் வீட்டில் கொண்டு போய் விட்டார். அதன் பின் என்னைப் பார்க்க வருவதே இல்லை. (ய)

## சட்ட விரோதச் செயலை அறிவித்தவர் வெட்டிக் கொலை

சந்தேக நபர் சட்ட விரோதமாகச் சாராயம் காய்ச்சுவதைக் காலஞ்சென்றவர் பொலீஸாருக்கு அறிவித்ததால், அவர் மீது வஞ்சம் தீர்க்கப்பட்டது என ஜா-எலையைச் சேர்ந்த 40 வயதான வியாபாரி ஜோஸப் சில்வாவின் மரணம் பற்றிய விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காலஞ்சென்றவரின் மனைவி 35 வயதான அலிஸ் டயஸ் தன் சாட்சியத்தில் கூறியதாவது:-

"கடந்த ஜூ 10-ம் திகதி எனது கணவர் எங்கள் புதல்வனுடன் நெல் வயலை நோக்கி நடந்து சென்ருர். அப்போது தந்தை அடிக்கப்படுவதாக என் மதன் சப்தமிட்டதைக் கேட்டு நான் அங்கே ஓடினேன்.

"அங்கு தலையில் வெட்டப்பட்ட நிலையில், இரத்தம் பீறிட என் கணவரைக் கண்டேன்.

"அச்சமயம், சந்தேக நபர் கையில் ஒரு வாள் வைத்திருந்தார்- அவர் பின்பு வீட்டுக்குள் சென்று ஒரு தடியை எடுத்து வந்து என் கணவரை அடித்தார்."

ஸ்டான்லி சில்வா என்ற காலஞ்சென்றவரின் புதல்வனும் வாக்கு மூலம் அளித்தான்.

மரண விசாரணை அதிகாரி திரு. எகர்டன் பி- வீரக்கூன் கொலை எனத் தீர்ப்பளித்தார். (ய)

### பார்த்துக் கொண்டிருக்கவா?

கழுத்தை ரெயில் தண்டவாளத்தில் கொடுத்துத் தற்கொலை செய்து கொள்வோர் தொகை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதாகத் தெரிகிறது. கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் தினசரி இத்தகைய தற்கொலைகள் ஒவ்வொன்று நடைபெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு அநியாயமாக உயிரைப் போக்குவதற்கு உரிய காரணங்கள் என்ன? வறுமையா அல்லது வேறு எதுவுமா? யாதுதான் என்பதை அரசு அறிந்து கொள்ள வேண்டாமா? பொதுப்படையான காரணத்தை அறிந்தால், இத்தற்கொலைகளை ஓரளவிலாவது தடுத்துக் கொள்ளலாமல்லவா? தம்முயிரையே போக்குவோரை நாம் என்ன செய்ய முடியும் என்று அரசும் சமுதாயமும் பார்த்துக் கொண்டிருக்கலாகாது.

தந்தி

## தீவுப் பகுதி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 27

தீவுப்பகுதி படகுச் சேவையை அரசாங்கம் பொறுப்பேற்று நடாத்த வேண்டுமென நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

"மேலும் இரண்டு வள்ளங்களை வாங்கி சேவைக்கு விட்டால், மூன்று வேளை சேவையை நடத்தலாம். அதனல் தீவுப் பகுதி மக்களின் பிரயாணக் கஷ்டங்களைத் தீர்க்க முடியும்" என ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இக்கூட்டத்தில் கூறினர். (ய-220)

## 18 வருடம் 6000 காதல் கடிதங்களை எழுதிய கணவன்

6 பிள்ளைகளின் தந்தையரான தென் ஹலிவெல் தன் மனைவியை உயிருக்குயிராய்க் காதலிக்கிருர். விவாகமாகி 18 வருடங்கள் ஆகியும் இன்னும் தினசரி காதல் சொட்டும் கடிதங்களை எழுதிக் கொட்டுகிருர்.

"நாங்கள் விவாகம் செய்தது முதல் என் கணவர் தினமும் ஒரு காதல் கடிதத்தை எழுதி என்னை மகிழ்விக்கிருர். என் கணவர் தென் மிகவும் அற்புதமான காதல் மன்னன். 18 ஆண்டுகளுக்கு முன் விவாகம் செய்த எங்களுக்கு ஆறு பிள்ளைகள் இருந்தும் என்னை சொபியா லோறனைப் போல் ஆனந்தத்தில் மிதக்கச் செய்கிருர் என் கணவர்" என இந்தக் காதல் மன்னனின் மனைவி ஜீன் கூறினர்.

இங்கிலாந்தில் விக்ட்பேர்த்தில் உள்ள கார் உதிரிப்பாக ஆலை ஒன்றில் 39 வயதான ஹலிவெல் வேலை செய்கிருர்.

தனது இறவாத காதலை அவர் காகிதத் துண்டுகளிலும் பழைய கடித உறைகளிலும் ரசிதுகளின் பின்புறத்திலும் எழுதி அவைகளை மனைவிக்குத் தபாலில் அனுப்புகிருர். அல்லது வீட்டில் மனைவி பார்க்கும் இடத்தில் வைக்கிருர்.

தன்னுடன் வேலை செய்பவர்கள் கிண்டல் செய்வதை அவர் பொருட்படுத்துவதில்லை. "எனக்கு அவர்களைப் பற்றி அக்கறை இல்லை. எனது மூத்த மகள் டெஸியா எனக்குப் "பைத்தியம்" எனப் பரிகசிக்கிருள். எல்லாக் கடிதங்களும் முட்டாள்தனமானவை என அவள் கூறுகிருள். ஆனல் இதுபற்றி நான் கவலைப்படவில்லை" என்றும் ஹலிவெல் கூறினர்.

மகள் டெஸியாவுக்கு 17 வயது. பெவான் 11 வயது. றெயின் 9 வயது. கிளன் 6 வயது. ஷெல்டன் 2 வயது. அலிசன் 1 வயது. இவ்வாறு அவருக்குப் பிள்ளைகள் இருக்கிருர்கள்.

"நான் ஒரு பெரிய எழுத்தாளன் அல்ல. ஆனல் நான் சொல்வது இருதயத்திலிருந்து பிறக்கிறது. என் மனைவிக்கு அது புரியும்" என்கிருர் ஹலிவெல்.

"அவள் பொறுமைசாலி. விஷயமறிந்தவள். குடும்பத்தைச் சரியாக நிர்வகிக்கிருள். பணம் பற்றுக்குறை ஏற்படும்போது அவள் வருந்துவதில்லை. எப்போதும் மகிழ்ச்சியும் புன்னகையுமாக இருக்கிருள். அவள்தான் ஒரு சரியான மனைவி. தினமும் காதலைக் கொட்டுவதற்குத் தகுதி வாய்ந்தவள் என் மனைவி" என்றும் கணவர் தென் பாராட்டினர்.

"சிறிய சச்சரவுகள் எங்களுக்குள் ஏற்படுவதுண்டு- ஆனல் பட்டென்று அவை மறைந்து விடும். நாங்கள் இன்பத்தில் திளைப்போம்" என்று கூறும் தென், ஒவ்வொரு இரவும் மேசையில் இருந்து கீழ்க்கண்ட முறையில் தன் கடிதங்களை எழுதுகிருர்.

"என் இனிப்பான மலரே! உன்னை அரிய மலர்ப் பொக்கிஷமாக நான் பாதுகாப்பேன். என் வாழ்வில் புதிய மகிழ்ச்சியை ஒவ்வொரு நாளும் உண்டாக்குகிருய். உன் அழகான இதழ்கள் இருக்கின்றனவே, அவை முத்தமிட முற்றும் பொருத்தமான இதழ்கள். உன் கண்களோ... ஐயோ... ஒவ்வொரு நாளும் என் காதல் வளருகிறது. ஒரு நாளும் அது குறையாது."

35 வயதான அவரது அழகிய மனைவி ஜீன் கூறுவதாவது:-

"என் கணவர் ஒரு நாள் கடிதம் எழுதத் தவறினலும் மிகவும் ஏமாற்றம் அடைவேன். ஒவ்வொரு நாளும் வாழ்க்கை சிறப்பாக ஆரம்பிக்கிறது. அவரது கடிதம் ஒவ்வொரு நாளும் ஊக்கமூட்டும் ஒரு குளிசையாக இருக்கிறது. வீட்டு வேலைகள் முடிவுற்று, பிள்ளைகள் படுக்கைக்குப் போகும்வரை இந்த ஊக்க உணர்ச்சி நீடிக்கிறது. நான் 19 வயது பருவக் குமரியாக உணருகிறேன். எல்லா மனைவியருக்கும் இந்த உதாரணத்தைச் சிபார்சு செய்வேன்.

"ஒவ்வொரு பிள்ளையைப் பெற்றவுடனும் காதலை அள்ளிப் பொழியும் விசேஷ நீண்ட கடிதங்களை அவர் அனுப்பி வைக்கிருர்" என்கிருள் மனைவி.

சில கடிதங்கள் கவிதை உருவிலும், சிறு குறிப்பாகவும், சித்திர வேலைப்பாடுகளுடனும், முத்த அடையாளங்களுடனும் தென்னின் காதல் கடிதங்கள் காணப்படும். (ய)

## பூங்காவில் பொருட்காட்சி

விகார மஹா தேவியின் ஒரு பகுதி விரைவில் ஒரு பொருட்காட்சிசாலையாக மாறும்.

கொழும்பு மாநகரசபை ஆரம்பிக்கப்பட்டது முதல் உபயோகிக்கப்பட்ட உபகரணங்களும் பொருட்களும் சரித்திர மாணவர்களுக்காக அங்கு காட்சிக்கு வைக்கப்படும். (ய)

தந்தி
சிறு விளம்பரங்கள்

### வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவருத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொலை.

R- 6894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபாசக் காட்சிகளில் ஈடுபட்ட

# 10 துகிலுரிகன்னியருக்கு நீதிமன்றத்தில் தண்டனை

லண்டன், ஜுலை 27

லண்டனில் ஆபாச துகிலுரி நடனத்தில் ஈடுபட்டிருந்த 10 பெண்களும், ஒரு தொகையான ஆண்களும் நீதிமன்றத்துக்கு முன் நிறுத்தப்பட்டார்கள். ஒழுங்கீனமாக நடைபெற்ற மதுபான களியாட்ட விடுதியை நடத்த இவர்கள் உதவியாக இருந்தவர்கள் ஆவர்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஜோன் ரோஜர்ஸ் இதுபற்றிக் குறிப்பிடுகையில் லண்டனிலுள்ள சோஹோவில் துகிலுரி நடன கிளப்புகள் ஆபாசக் காட்சிகளில் ஒன்றையொன்று போட்டியிட்டுச் செயல்படுவதாகக் கூறினர்.

ஆணும் பெண்ணும் ஒழுங்கீன நடவடிக்கையில் ஈடுபட்ட பின், குறிப்பிட்ட பெண் மேடையில் நிர்வாணமாகக் காட்சி அளிப்பது இக்காட்சிகளில் ஒன்று என அவர் கூறினர்.

"நாஸி அட்டூழியம்" என்ற மற்றொரு காட்சியில், ஒரு அழகி மற்றொரு அழகியை சவுக்கால் அடித்து, தீயால் சுடுவதைப் போல் நடித்து பின் ஆபாச வேலைகளில் ஈடுபடுவது வழக்கம் என்றும் வழக்கறிஞர் கூறினர்.

"அங்கு வேலை பார்க்கும் 23 வயதான வில்லியம் மோர்டாச் என்பவரிடம், இந்தக் காட்சிகள் ஆபாசம் எனப் பொலீஸாரால் எடுத்துக் காட்டப்பட்டபோது நான்கூட அப்படித்தான் நினைத்தேன் என அவர் பதில் அளித்தார்" என்றும் ரோஜர்ஸ் தெரிவித்தார்.

வேறு சில பெண்கள், துகிலுரியப்பட்ட நிலையில் பிரேதப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடு, 8 அடி நீளமான உயிருள்ள பாம்பு ஆகியவற்றுடன், கூட்டத்தில் உள்ள சிலரைத் தங்களுடன் காட்சியில் பங்கு கொள்ளுமாறு அழைக்கிறார்கள்.

ஓர் இரவுக்கு குறிப்பிட்ட கிளப் 500 பவுண் வரை சம்பாதிக்கிறது என்றும் வரவர ஆபாசக் காட்சிகள் அதிகரிப்பதுடன், அனுமதிச்சீட்டுக்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறதென்றும் திரு. ரோஜர்ஸ் கூறினர்.

இந்தக் கிளப்பை நடத்தும் ஹோல்ட்ஸ் டீன் என்பவர் முன்பும் இதுபோன்ற ஒழுங்கீனமான விடுதியை நடத்தியதற்காகத் தண்டிக்கப்பட்டவர். போதை மிக்க மதுபானங்களையும், லைசென்ஸ் பெறாத சங்கீதம், நடனம் ஆகியவற்றையும் அவர் வழங்கி வந்தார் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பெண்களுக்கு வாரம் 20 முதல் 30 பவுன்கள் மட்டுமே சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. ஆபாசக் காட்சிகளில் இவர்கள் ஈடுபட்டபோது, பார்வையாளர்களின் உற்சாகம் இப்பெண்களுக்கு மேலும் ஊக்கமூட்டியது என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

குற்றவாளிகள் என ஒப்புக்கொண்ட 8 பெண்களுக்கும் 100 பவுன் வரை அபராதம் விதிக்கப்பட்டது.

மற்றும் நால்வர் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (ய)

## 100 ரூபாவை பறித்து ஓட முயன்றவன் பிடிபட்டான்

காலி, ஜுலை 27

காலி மாநகர சபையில் மின்சாரக் கட்டணம் செலுத்த வந்த ஒருவரிடமிருந்து 100 ரூபாவைப் பறித்துக் கொண்டு ஓட முயன்ற பலே திருடன் ஒருவன் விரட்டிப் பிடிக்கப்பட்டான்.

பறித்த வேகத்தில் ஒரு பகுதி மின்சார பில் மட்டும் அவன் கையில் அகப்பட்டுக் கொண்டது. ஆனல் பணம் அவனிடம் சிக்கவில்லை.

18 வயதான அவன் காலி பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இதற்கிடையில், காலி பஸ் நிலையம் பிக்பொக்கெட்காரர்களுக்கும் பறித்துக் கொண்டு ஓடுபவர்களுக்கும் ஒரு தளமாக விளங்குகிறது.

பட்டப்பகலில் அப்பாவிப் பிரயாணிகளிடமிருந்து பணப் பைகள், சூட்கேஸ்கள், பார்சல்கள், நகைகள், கைக்கடிகாரங்கள் ஆகியன பறித்துச் செல்லப்பட்டுள்ளன.

இவர்கள் திட்டமிட்ட முறையில் செயல்படுவதால் பஸ் நிலையத்தில் உள்ள இரண்டு மூன்று பொலீஸாரால் எதுவும் செய்ய முடிவதில்லை. (ய)

## 'என் மீதும் கணவர் மீதும் திராவகம் வீசி தீவைத்தார்

"எனது செருப்புக்களை எடுப்பதற்காக பிரார்த்தனை அறையில் இருந்து படிக்கட்டுக்கு நான் திரும்பியபோது எதிரி என்னை நோக்கி வந்தார். இடது கையில் தீப்பந்தத்துடனும் வலது கையில் ஒரு டின்னுடனும் அவர் காணப்பட்டார். டின்னிலிருந்து திராவகம் என் மீது வீசப்பட்டதால் வலது கையால் முகத்தை மூடிக் கொண்டு திரும்பினேன்.

"திராவகம் என் வலது கையில் விழுந்தது. எதிரி தீப்பந்தத்தை என் மீது வைத்தார். அப்போது என் வலது கையில் தீ பற்றி எரிவதைக் கண்டேன். அதன் பின் எதிரி டின்னிலிருந்த திராவகத்தை என் பின்னலிருந்த கணவர் மீது இரு தடவை வீசி தீப்பந்தத்தைப் பிடித்தார்.

"இதை அடுத்து என் கணவர் மீது பெருமளவு தீப்பிடித்ததால், தீயை அணைக்கும் பொருட்டு அவர் தரையில் விழுந்து புரண்டார்."

மொரட்டுவை நகர சபைத் தலைவர் திரு. டெல்கே லாரன்ஸ் சொலோன் பீரிஸ் என்பவரைக் கொலை செய்ததாகவும், அவரது மனைவியைக் கொலை செய்ய முயன்றதாகவும் செல்லா பெருமாகே சுமதிபால பெர்னண்டோ என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் டுலின் மெர்வின் பீரிஸ் இவ்வாறு சாட்சியமளித்தார்.

இவ்வழக்கு களுத்துறை அசைஸ் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

"எதிரி, மண்ணெண்ணெய் அல்லது பெட்ரோல் அல்லது ஏதோ ஓர் எரிபொருளை திரு. பீரிஸ் மீதும் அவரது மனைவி மீதும் வீசி தீப்பந்தத்தினல் அவர்களது உடலைக் கொளுத்தினர்" என முடிக்குரிய தரப்பில் கூறப்பட்டது.

சாட்சி மேலும் கூறியதாவது:—

"எதிரி மொரட்டுவை நகர சபையில் ஒரு ஊழியராய் இருந்தார். அவரது வேலை நிறுத்தப்பட்டது. எனது கணவர் தலைவரான பின் எதிரிக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட்டது. ஆனல் பல்வேறு ஒழுங்கீனங்கள் காரணமாக என் கணவர் அவரை வேலை நீக்கம் செய்தார்.

"மேத்தானந்தாவும், திரு. மெண்டிஸும் எங்களை ஆஸ்பத்திரியில் சேர்ந்தார்கள். சில தினங்களுக்குப் பின் என் கணவர் காலமானர்.

"நாங்கள் இருவரும் ஆஸ்பத்திரியில் இருந்தபோது என்னை ஒரு சில்லுக் கதிரையில் வைத்து என் கணவரிடம் எடுத்துச் சென்றனர். கணவர் அப்போது என்னிடம் பேசினர். எங்கள் மகனின் எதிர்காலம் எப்படி இருக்கும் என அப்போது அவர் கேட்டார்.

"1969 ஏப்ரல் 13-ம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட என் கணவர் 19-ம் திகதி இறந்தார்."

இக்கட்டத்தில் சாட்சி தேம்பித் தேம்பி அழுதார். இதைக் கண்ட எதிரியும் மனம் நெகிழ்ந்து கண்ணீர் வடித்தார். (ய)

## மஞ்சள் தூளில் கலப்படம் செய்தனர்

மஞ்சள் தூளில் கலப்படம் செய்து விற்றதாக களனி சார்ல்ஸ் இன்டஸ்ரீஸ் உரிமையாளர் எஸ். ஜி. சார்ல்ஸ் மீதும், அவரது கடையில் விற்பனையாளராகக் கடமையாற்றும் பீ. எ. பீரிஸ் என்பவர் மீதும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் ஆஜராகிய வழக்கறிஞர் திரு. கிளறென்ஸ் எம். பெர்னண்டோ நீதிமன்றத்தில் தெரிவித்ததாவது:— "எதிரிகள் பத்து பக்கெட் மஞ்சள்தூளை தெகிவளை, காலி வீதியில் வசிக்கும் பி. ஏ. தயாசேனவிற்கு விற்றுள்ளார்கள்.

இவற்றுள் 3 பக்கெட்டுகள் ரசாயனப் பரிசோதனைக்காக அரசாங்க பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களது அறிக்கையின்படி இந்த மஞ்சள் தூளில் 65 சதவீதம் கலப்படம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் வழக்கு அக்டோபர் மாதம் 10-ம் திகதிக்குப் பின் போடப்பட்டது.

எதிரிகளின் சார்பாக வழக்கறிஞர் திரு மகிந்தா விஜயசூரியா ஆஜராகியிருந்தார். (ய-7)

## ஹிப்பிகளில் மாறுதல்

இலங்கையின் பல பாகங்களிலும் நடமாடும் ஹிப்பிகளிடம் திடீரெனப் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

வழக்கமாக பூங்காக்களின் அரங்குகளிலும் ரோட்டின் நடைபாதைகளிலும் படுத்தெழும்பித் திரியும் ஹிப்பிகள் தற்போது சுத்தமான ஆடையணிந்து முதல் தர ஹோட்டல்களில் வசிப்போராய் மாறியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. இத்திடீர் மாற்றத்தின் பின்னர் அவர்கள் மக்களுடன் சகஜமாகப் பழகி வருகின்றனர்.

ஆனல் கிழிந்த கந்தல் ஆடைகள் விலை மதிப்புள்ள ஆடையாக மாறியதும், நடைபாதை இருப்பிடம் முதல்தர ஹோட்டல்களாக மாறியதும் பெரும் புதிராக இருக்கிறது என மக்கள் பேசிக்கொள்கின்றனர். (ய-7)

## பிரிட்டிஷ் வேலைநிறுத்தத்துக்கு மூன்று நாடுகள் ஆதரவு

லண்டன், ஜுலை 27

ரஷ்யா, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளின் துறைமுக ஊழியர்கள் பிரிட்டிஷ் துறைமுக ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவித்து உள்ளனர்.

பிரிட்டிஷ் துறைமுகங்களில் இருந்து வரும் கப்பல்களைப் பகிஷ்கரிக்கத் தயாராக இருப்பதாகவும் இவர்கள் அறிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் துறைமுகங்களில் இருந்து வரும் கப்பல்களை பகிஷ்கரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சர்வதேசவர்த்தக துறைமுகத் தொழிலாளர் சங்கத்தை பெல்ஜியம் துறைமுக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

12-வது தினமாகப் பிரிட்டனில் நடைபெற்று வரும் இந்த வேலை நிறுத்தத்தினல் லட்சக்கணக்கான ஸ்ரேர்லிங்கை பிரிட்டன் இழந்திருப்பது தெரிந்ததே.

ஹாலந்து, மேற்கு ஜெர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகளில் உள்ள துறைமுக ஊழியர்களும் பிரிட்டனில் இருந்து வரும் கப்பல்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று பெல்ஜிய துறைமுக ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரெஞ்சு துறைமுகங்களில் தற்பொழுது இரு பிரிட்டிஷ் கப்பல்கள் நிற்கின்றன. இவற்றில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பிரெஞ்சு துறைமுக ஊழியர்கள் மறுப்புத் தெரிவித்து உள்ளனர்.

அடுத்த வாரம் பிரான்சுக்கு வரும் எட்டு பிரிட்டிஷ் கப்பல்களுக்கும் இதே நிலைமையே ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் துறைமுக ஊழியர்களுக்கு ரஷ்ய துறைமுக ஊழியர்கள் ஆதரவு தெரிவித்த போதிலும் தமது நடவடிக்கை பற்றி இதுவரை எதுவும் அறிவிக்கப்படவில்லை. (5)


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

S. P. S. ஜெயம் அன் கோ.

மதுரை - கொழும்பு.

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.
தொலைபேசி எண்: 26584





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென் வியட்நாமில் ஸ்ரீமாவின் பிரபல்யம்

# வியட்காங் பெண் மந்திரிக்கு உற்சாகமான வரவேற்பு

**பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகாவின் பெயர் தென் வியட்நாமில் நன்கு பிரபலமாய் இருக்கிறது என நேற்று கொழும்புவந்த தென் வியட்நாம் புரட்சி (வியட்காங்) அரசாங்கத்தின் வெளிநாட்டுமந்திரி திருமதி நூயன் தி பின் கூறினார்.**

கட்டுநாயகா விமான நிலையத்தில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, திரு. பீட்டர் கெனமன், திரு. லெஸ்லி குணவர்த்தன ஆகிய அமைச்சர்களும், பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜயக்கொடியும் திருமதி பின்னை வரவேற்றனர்.

ஏர் இந்தியா "கெரவல்" விமானத்தில் வந்திறங்கிய திருமதி பின் ஏராளமான மக்கள் கூட்டத்தினால் ஆரவாரமாக வரவேற்கப்பட்டார்.

செங்கொடிகளும், சிங்கக் கொடிகளும் விமான நிலையத்தை அலங்கரித்தன. நடுவில் பிரமாண்டமான வியட்காங் செங் கொடி பறந்தது கொண்டிருந்தது.

முக்கியஸ்தர்கள், ராஜதந்திரிகள் ஆகியோருக்கு திருமதி பின்னை அமைச்சர் பீலிக்ஸ் அறிமுகம் செய்து வைத்தார்.

முக்கியஸ்தர்களில் வண மெதகொட சுமனதிஸ்ஸ தேரோ, வண களுவாமோதர சிறினிவாஸ தேரோ, பீகிங் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. எஸ். டி. பண்டாரநாயகா ஆகியோரும் இருந்தனர்.

அமைச்சர் லெஸ்லி குணவர்த்தன வெற்றிலை கொடுத்து திருமதி பின்னை வரவேற்றார்.

திருமதி பின் தமது உரையில் தென் வியட்நாம் புரட்சி (வியட்காங்) அரசாங்கத்துக்கு இலங்கை பூரண ராஜிய அங்கீகாரம் வழங்கியதை வரவேற்றார்.

திருமதி பின் மோட்டார் ஊர்வலத்தில் அலரிமாளிகைக்குப் புறப்பட்டார். வீதியின் இருமருங்கிலும் ஏராளமான மக்கள் கூடி நின்று அவருக்கு மகிழ்ச்சி தெரிவித்தார்கள். (ய)

## இந்திய தூதரகம் தாக்கப்பட்டது

சைகோன், ஜூலை 27

சைகோனில் உள்ள இந்தியத் தூதரகத்தைத் தாக்கிய தென் வியட்நாம் மாணவர்கள் மீது பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

வியட்காங் வெளிநாட்டு அமைச்சர் நூயென் தி பின் இந்தியாவுக்கு விஜயம் செய்ததை ஆட்சேபித்து இந்தச் சம்பவம் நடைபெற்றது.

பொலீசாரினல் விரட்டப்பட்ட மாணவர்கள், நேரடியாக வெளிநாட்டு அமைச்சுக்குச் சென்று அங்கு தமது முறைப்பாட்டைத் தெரிவித்தனர்.

தூதரகம் தாக்கப்பட்ட சமயம், தூதரக அதிகாரிகள் தூதரகத்தின் இரண்டாம் மாடியில் ஒளிந்து கொண்டனர்.

இத் தாக்குதல் பற்றி சைகோனில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஷியாம் சுந்தர் நாத் தென் வியட்நாம் வெளிநாட்டு அமைச்சில் புகார் செய்துள்ளார்.

தென் வியட்நாமில் உள்ள இந்திய கடைகளையும் தாக்கப் போவதாக மாணவர்கள் பயமுறுத்தி உள்ளனர்.

இந்திய தூதரகத்துக்கு வெளியே தொங்க விடப்பட்டிருந்த இந்திய தேசியக் கொடியைக் கிழித்து மாணவர்கள் இயிட்டனர் (ய)

## சலஸார் காலமானார்

லிஸ்பன், ஜூலை, 27

போர்த்துக்கலின் பிரதமராக 36 ஆண்டுகள் சர்வாதிகாரம் செலுத்திய டாக்டர் அன்டோனியோ டி ஒலிவிரா சலஸார் தன் 81-வது வயதில் இன்று காலமானார்.

போர்த்துக்கல் வானொலி தன் வழக்கமான நிகழ்ச்சியை இடையில் நிறுத்திவிட்டு இந்த மரணச் செய்தியை அறிவித்தது. (ய)

## மாவை ஆலயத்தை விட்டு பொலீஸார் அகன்றனர்

தெல்லிப்பழை, ஜூலை 27

மாவிட்டபுரம் ஆலயத்தில் 21 நாட்களாகக் காவல் செய்து வந்த பொலீஸார் நேற்று வாபஸ் பெற்றனர். இதை அடுத்து பூட்டப்பட்ட உட்கதவுகள் திறக்கப்பட்டதுடன், சண்டாளப் பிராயச்சித்தமும் செய்யப்பட்டது.

கார்த்திகைத் திருவிழா நாளை முன்னிட்டு நேற்று வெளி வாசலில் விளக்குகள் எரிக்கப்பட்டன.

கிழக்கு வாசலில் பொலீஸார் சப்பாத்துக் கால்களுடன் நடமாடியதும் ஹரிஜனர்கள் ஆலயத்தின் இரண்டாவது வீதிக்குச் சென்று, உள்ளே கதவுகள் பூட்டப்பட்ட நிலையிலும் வழிபாடு செய்ததுமே சண்டாள பூசைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

அப்போது திரு. ஸி. சுந்தரலிங்கம் ஆலயத்தில் இருந்தார். பொலீஸார் ஆலய வெளி வாசலில் நிறுவப்பட்டுள்ள தற்காலிக பொலீஸ் நிலையத்தில் தங்கியிருக்கிறார்கள். (ய)

### வழிபாட்டை விடமாட்டோம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

"நாம் விழிப்புடன் இருக்கிறோம். மாவிட்டபுரம் ஆலயக் கதவுகள் திறக்கப்பட்டு, பூசைகள் நடைபெற்றால், நாமும் உட்செல்லுவோம். எமது வழிபாட்டு உரிமையை நிலைநாட்டுவோம். ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்று பிரசாரம் செய்யும் சைவப் பெரியார்கள் எமைத் தடுப்பதில் அர்த்தமில்லை ஆண்டவனைத் தரிசிப்பதில் உள்ள எமது உரிமையை விட்டுக் கொடோம்."

யாழ். வெகு ஜன இயக்கத் தலைவர் திரு. என். ரி. என். நாகரத்தினம் "தந்தி" நிருபருக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார். (ய-220)

## தோட்டப் பாடசாலைகள் பற்றி

### ஐனுப் அஸீஸ் பேச்சு நடத்துவார்

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் விரைவில் பொறுப்பேற்கும். அதற்காக ஐ. தொ. கா. கல்வி அமைச்சரை விரைவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் மென ஐ. தொ. கா. தலைவர் திரு. ஏ. அஸீஸ் பசறை குருப் எல்ல டிவிஷனில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:

"தொழிலாளரின் நிலை பற்றி அறிய தொழிலமைச்சர் திரு. மைக்கல் சிறிவர்த்தன ஒரு குழுவினை நியமித்துள்ளார். இக் குழுவில் நானும் அங்கத்துவம் வகிக்கிறேன். இக்கமிட்டி இன்றுள்ள நடைமுறைக்கொவ்வாத சில தொழிற் சட்டங்களை அகற்றுவதற்கு வழி செய்யும். இன்றையதொழிற் சட்டங்களால் தொழிலாளருக்கு எவ்வித பயனும் இல்லை. அவை போதியளவு, உரிமைகளை வழங்கும் சக்தியற்றவைகளாக இருக்கின்றன. இக் கமிட்டியின் சிபார்சின் பேரில் தொழில் கமிஷனரால் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் முதலாளிமார் கட்டாயமாகக் கலந்து கொள்ள வேண்டிய நிலை உருவாக்கப்படும். தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் தொல்லைக்குள்ளானவர்கள். அவர்கள் சரியான வீட்டு வசதியின்றி, அதிகமான நேரம் உழைக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இவர்களுக்கும் இந்நாட்டில் உள்ள ஏனைய தொழிலாளர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் வண்ணம் தொழிலமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு முடிவினை மேற்கொள்ளும். பஞ்சப்படி 17/50 போராட்டத்தில் பங்குபற்றியமைக்காக முதலாளி வர்க்கத்தால் பலி எடுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும், 1965ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் வேலை இழந்தோருக்கும் மீண்டும் வேலை வழங்குவது சம்பந்தமாகவும் இக் குழு பரிசீலனை செய்யும்.

## 'சிறைகளில் ஒழுங்கீனமும் கட்டுப்பாடின்மையும்'

சிறைகளில் ஒழுங்கீனமும், கட்டுப்பாடின்மையும் நிலவுவதாகப் புகார் கூறப்படுகிறது.

"ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குக் கைதிகள் சென்று நண்பர்களுடன் அளவளாவுகிறார்கள். சிரேஷ்ட சிறை அதிகாரிகளின் வீடுகளில் சில கைதிகள் வேலை செய்கிறார்கள். சிலர் விறகு வெட்டுகிறார்கள். மார்க்கெட்டுக்குப் போகிறார்கள். வீட்டைச் சுத்தம் செய்வது முதல் பல வீட்டு வேலைகளைச் செய்கிறார்கள்.

"இதற்குப் பதிலாக அவர்கள் சிறை அதிகாரிகளால் சற்றுத் தாராளமாக நடத்தப்படுகிறார்கள்.

"வெற்றிலை, பீடி, சிகரெட், சுருட்டு, மதுபானம் ஆகியனவும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது" என்றும் கூறப்படுகிறது.

சிரேஷ்ட அதிகாரிகளுக்கு எதிராகத் தங்களால் எதுவும் செய்ய முடியாது எனவும் தங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் இருப்பதாகவும் சிரேஷ்ட அதிகாரிகள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டிருப்பதாகவும் சிறை காவலர் ஒருவர் தெரிவித்தார். (ய)

### 5 லட்சம் பேருக்கு வேலை

5 லட்சத்துக்கு மேற்பட்ட வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை அளிப்பது சம்பந்தமாக நாளை உயர்தர மகாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது.

பிரதம மந்திரி சிறிமாவோ இம் மகாநாட்டை கூட்டுகிறார். (ய)

### சாரதி கொலை வழக்கு இன்று தீர்ப்பு

சண்டிலிப்பாய் சாதிக் கலவரக் கொலை வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படும்.

முடிக்குரிய தரப்பு, எதிர்தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர்கள் கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் நேற்று தமது தொகுப்புரைகளை நிகழ்த்தினார்கள்.

இன்று அசைஸ் கமிஷனர் திரு. டி. பி. நிசங்கா தமது தொகுப்புரையை நிகழ்த்துவார்.

சண்டிலிப்பாய் சாதிக் கலவரக் கொலை வழக்கு நேற்று நான்காவது தினமாக கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் அசைஸ் கமிஷனர் திரு. டி. பி. நிசங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.


## அன்பும் காதலும்

நிரந்தரமாவதற்கு, வேண்டியவர்களை அடைவதற்கு, வேண்டாதவர்களை தவிர்ப்பதற்கு, திருமணம் நடைபெறுவதற்கு, கொடியவர்களை அடக்குவதற்கு, பரீட்சைகளில் சித்தியடைவதற்கு, வழக்கு என்பனவற்றில் வெற்றியடைவதற்கு, நோய் பீதி ஒழிந்து, முன்னேற்றத்திற்கு வழி செய்து கொடுக்கப்படும்.

எழுதுங்கள் அல்லது நேரில் சந்தியுங்கள்.

அரசாங்க அனுமதி பெற்ற குப்த விஞ்ஞானரீதி

**பி. எம். திஸ்ஸாநாயக்க,**

103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானை.

தொலைபேசி: 33955.



## ராணி




31-5-70 இதழில்

★ பெண்ணோடு பிறந்த நோய்! — திருமதி வேழவேந்தன்.
★ இந்தியாவின் மக்கள் தொகை — செய்தி.
★ புதுமைத் திருமணம்! — படங்களுடன்.
★ வெளிநாட்டுப் பயணம் — எம். ஜீ. ஆர்.
★ வயிறு இரைச்சல் — வைத்தியர்.

மற்றும் பல அம்சங்களுடன் விற்பனையாகிறது.

வருட சந்தா ரூ. 20-80
6 மாத சந்தா ரூ. 10-40

வெஸ்டன், தபால் பெட்டி 960, கொழும்பு



இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை). வெளியிட்ட தேதி 28 ஜூலை 1970
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org